## இனோபற் (INOBAT) என்றால் என்ன?

உற்பத்தி, இறக்குமதி, வணிகம் ஆகிய துறைகளிருந்து ஏறக்குயை 130 அங்கத்துவ நிறுவனங்கள் ஒன்றிணைந்து ஏற்படுத்தியதே மின்கலங்களை அகற்றுவதற்ககான அக்கறையுள்ள நிறுவனம் என்னும் அமைப்பாகும். சுற்றுச்-சூழலுக்கான கூட்டாட்சி அலுவலகத்தின் (BAFU) வேண்டுதலின் பேரில் மின்கலங்கள் மற்றும் மின்கொள் கலங்களுக்கான செலவை முன்கூட்டியே (VEG) மேற்படி கலங்களை வாங்குவோரிடமிருந்து அவற்றை வாங்கும் பொழுதே இனோபற் அறவிடுகின்றது. மேற்படி கலங்களைச் சேகரித்தல், அவற்றை ஏற்றி இறக்குதல் மற்றும் மீள்பாவனை போன்றவற்றிற்கும், இவை தொடர்பான தகவல் மற்றும் விளம்பரச்செயற்பாடுகள், வர்த்தகம் மற்றும் மக்களுக்கு வழங்குதல் போன்றவற்றிற்கு நிதிவழங்குவதற்கும் இது பயன்படுகின்றது.




தொலைக்காட்சிகளிலும் சுவரொட்டிகளிலும் : மின்கலங்களை அகற்றுதல் தொடர்பாக நகைச்சுவையான விளம்பரம்

தவிரவும்: மின்கலங்களினால் இயக்கப்படும் விளையாட்டுப்பொருட்கள் கூட உரியமுறையில் அகற்றப்படல் வேண்டும். பாவனையின் பின் தயவுசெய்து இவற்றை விற்பனை நிலையத்திற்கு எடுத்துச் சென்று திருப்பிக் கொடுக்கவும். www.sens.ch

SENS®

## மேலதிகமான எல்லாவற்றிற்கும் www.inobat.ch

இனோபற் இணையத்தளத்தில், இது தொடர்பான தகவல்கள், முற்குறிப்புக்கள், வழிமுறைகள் மற்றும் ஒரு குறும்படம் போன்றவற்றையும் மின்கலங்கள், மின்கொள்கலங்கள் போன்றனவற்றை சரியான முறையில் அகற்றுதல் மற்றும் அவற்றின் பாவனை ஆகியவற்றினையும் பெற்றுக்கொள்ளலாம்.




INOBAT, Postfach 1023, Bern 14

inobat@awo.ch

# மின்கலங்களை (பற்றறிகளை) சரியான முறையில் அகற்றுதல்.



**மின்கலங்களும் மின்கொள்கலங்களும் மீள ஒப்படைக்கப்படல் வேண்டும்.**

## மின்கலங்களும் மின்கொள்கலங்களும் மீள ஒப்படைக்கப்படல் வேண்டும்

பாவித்த மின்கலங்கள், மின்கொள் கலங்களை சாதாரண குப்பைகளுடன் போடலாகாது. மேற்படி கலங்களை அவற்றின் விற்பனை நிலையங்களிலோ அன்றி அவற்றை சேகரிக்கும் நிலையங்களிலோ கட்டாயமாக மீள ஒப்படைக்க வேண்டுமென்பது எம் ஒவ்வொருவரதும் கடமையாகும். ஏன்? ஒருபுறத்தில், சரியான முறையிலான மீள்பாவனைவட்டத்தின் மூலம் நச்சுத் தன்மையுடைய பாரஉலோகங்களாகிய கட்மியம், ஈயம், பாதரசம் போன்றன சாதாரண குப்பைகளிலிருந்து விலக்கி வைக்கப் படுகின்றன. மறுபுறத்தில் பெறுமதியான மூலப்பொருட்கள் மீளப் பெறப்படுகின்றன.



## மூன்றில் ஒரு பகுதி சாதாரண குப்பையினுள் (சென்று) காணாமல் போகின்றது

மின்கலங்கள், மின்கொள் கலங்கள் எமது நாளாந்த வாழ்வின் ஒரு பகுதியாகிவிட்டது. வெவ்வேறு வடிவங்கள், பருமன்கள் மற்றும் விதங்களில் இவை சேமித்த சக்தியை எமக்கு வழங்குகின்றன. மின்கலங்களை நாம் தனியாகவும், உதாரணமாக வழமையான அடுக்குகளாக, அல்லது கருவிகளினுள் இணைக்கப்பட்டவாறு, உதாரணமாக மணிக் கூட்டினுள் சிறுவட்டக்கலங்களாக, அல்லது மின்கொள்கலங்களாக கையடக்க செல்லிடை தொலைபேசிகள், லப்றொப் மற்றும் டிஜிற்றல் படப்படிப்புக்கருவிகளுடனும் வாங்குகின்றோம்.



சுவிற்சர்லாந்தில் ஒவ்வொரு வருடமும் 3700 தொன் மின்கலங்களும் மின்கொள்கலங்களும் கடைகளில் விற்பனையாகின்றன. இவற்றில் மூன்றில் இரண்டு பகுதி திருப்பியளிக்கப்பட்டு மீள்பாவனைச் சுற்றுவட்டத்தினுள் சென்றடைகின்றது. மூன்றில் ஒரு பகுதி சாதாரண வீட்டுக்குப்பைகளுள் அகற்றப்பட்டு காணாமல் போகின்றமை துரதிஸ்டவசமானதே!



## வாங்கும் விலையில் இவற்றை அகற்றும் செலவுத்தொகையும் உள்ளடக்கப்பட்டுள்ளது

மின்கலங்கள், மின்கொள்கலங்களை வாங்கும் ஒவ்வொருவர்க்கும் அவற்றினை உரிய முறையில் அகற்றுவதற்கான உரிமையும் உள்ளது. வாங்கும் விலையில் அவற்றை அகற்றுதலுக்கான செலவுத்தொகையும் (VEG) உள்ளடக்கப்பட்டுள்ளது.

## மீள ஒப்படைக்கப்படல் இலகுவானதும் கட்டணமெதுவுமற்றதுமாகும்

பாவிக்கப்பட்ட மின்கலங்கள், மின்கொள் கலங்களை மீளப்பெற்றுக்கொள்வதற்கு விற்பனையாளர் கடமைப்பட்டுள்ளனர். இவை விற்கப்படும் இடங்கள் யாவற்றிலும் இவற்றை இனாமாக மீளக்கையளிக்கப்படுவதற்கும் முடியும். சுவிற்சர்லாந்தில் மட்டும் 12 000 சேகரிப்பு நிலையங்கள் இதற்கென உள்ளன: மொத்த வியாபாரநிலையங்கள், நுகர்வோர்நிலையங்கள், புகைப்பட, மின்னியல் மற்றும் செல்லிடை தொலைத்தொடர்பு விற்பனை நிலையங்கள், சிறு பெட்டிக் கடைகள் எரிபொருள் நிலையங்கள். இவை தவிர மேலதிக சேகரிப்பு நிலையங்களினை நகர மற்றும் கிராமிய சபைகள் நிறுவியுள்ளன.










மீளப்பெற்றுக்கொள்ளும் ஸ்ரிக்கர், மின்கலப் பை, மின்கலப் பெட்டி: யாவும் பிரச்சனைகளின்றி மின்கலங்களை அகற்றுவதற்குரியனவே

## பெறப்பட்ட மூலவளங்களிலிருந்து இரண்டாவது முறையான பயன்பாடு

பாவிக்கப்பட்ட மின்கலங்கள், மின்கொள் கலங்கள் விம்மிஸிலுள்ள பாற்றெக் ஆ.கே (www.batrec.ch) மீள்பாவனை வேலைத் தளத்தைச் சென்றடைகின்றன. அங்கே இவை பல படிமுறைகளையுடைய நடைமுறைக்கு உட்படுத்தப்பட்டு இரசாயன மற்றும் இயந்திர ரீதியாகப் பிரிக்கப்படுகின்றன. மீளப் பெறப்பட்ட உலோகங்களாகிய, நாகம், இரும்பு போன்றன இரண்டாவது பாவனைக்கு மூலப்பொருட்களாக தொழிற் சாலைகளுக்கு விற்கப்படுகின்றன.





